# நீதித்துறை நடுவர் நீதிமன்றம், தேனி.

## C.C. No. 127/2018.

## வழக்கு சாட்சி – அ.சா. 4

| | | | |
|---|---|---|---|
| பெயர் | திரு.சண்முகப்பிரியா. | ஜாதி | |
| தந்தை பெயர் | சென்றாயன். | தொழில் | இல்லத்தரசி. |
| கிராமம் | கோடாங்கிபட்டி. | சமயம் | |
| தாலுக்கா மற்றும் மாவட்டம் | | வயது | 34/2025. |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 03.03.2025.

**(2வது எதிரி 3 முதல் 6 வரையிலான எதிரிகள் ஆஜர். அவர்களுக்காக பிரிவு BNSS ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது. எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.)**

**<u>முதல் விசாரணை:–</u>**

(1) நான் தற்போது, கோடாங்கிபட்டியில் குடியிருந்துகொண்டு, இல்லத்தரசியாக இருக்கிறேன். எதிரிகளை எனக்குத் தெரியும். அவர்கள் எனது ஊரைச் சேர்ந்தவர்கள். என் கணவர் சென்றாயன் சுமார் 10 வருடங்களுக்கு முன்பு, பரமகுரு மற்றும் அவரது மகன் செல்வம் ஆகியோர்களிடம் ரூ.3 லட்சம் கடன் வாங்கியிருந்தார். அதன்பின்னர், எனது மாமனாருக்கு இருதய அறுவை சிகிச்சை செய்ததால் எங்களால் எதிரிகளிடம் வட்டி சரியாகக் கொடுக்கமுடியவில்லை. எதிரிகள் எனது வீட்டின் முன்பாக வந்து நின்று சத்தம் போட்டார்கள்.

(2) அதன்பின்னர், கடந்த 27.09.2017ம் தேதி காலை 07.30 மணியைப்போல், எங்கள் வீட்டிற்குள் எதிரிகள் அனைவரும் வந்து, தேவியடியா மகனே என்றும், இன்னும் சில அசிங்கமான

M JAYAMANI Digitally signed by M JAYAMANI Date: 2025.03.03 18:15:20 +0530

வார்த்தைகளால் திட்டி சத்தம் போட்டார்கள். வீட்டிலிருந்து பாத்திரங்கள் அனைத்தையும் வெளியில் தூக்கி எறிந்துவிட்டு, என்னையும், என் மாமியார் லோகமணி, என் மாமனார் அழகர்சாமி ஆகியோர்களை வீட்டிற்கு வெளியே பிடித்துத் தள்ளினார்கள். மேலும், சத்தம் போட்டுவிட்டு உங்களைக் கொன்றுவிடுவோம் என்று அச்சுறுத்தும் வகையில் பேசினார்கள். அதன்பின்னர், எனது கணவர் வீட்டிற்கு வந்தவுடன் நாங்கள் காவல் நிலையம் சென்று புகார் கொடுத்தோம். அது சம்பந்தமாக போலிசார் எங்களை விசாரித்தார்கள்.

<u>**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –**</u>

நான் நீதிமன்ற முதல் விசாரணையில் சொல்லியுள்ளதுபோல்தான் போலிசார் விசாரணையில் சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். எனது கணவர் சென்றாயன் ஆஜர் எதிரியிடம் ரூ.3 லட்சம் கடன் பெற்றுள்ளார் என்றால் சரிதான். அதற்கு ஆதரவாக புரோ நோட் ஒன்று எனது கணவர் எழுதிக்கொடுத்துள்ளார் என்றால் சரிதான். எனது கணவர் மீது ஆஜர் எதிரி புரோ நோட் வழக்கு தாக்கல் செய்து, அந்த வழக்கு எதிரிக்கு ஆதரவாக தீர்ப்பாகிவிட்டது என்றால் சரிதான். எதிரி தனது கணவரிடம் அதிக வட்டி கேட்கவில்லை என்றால், கொடுத்த கடனைத்தான் கேட்டார் என்றால் சரியல்ல. முதல் விசாரணையில் சொன்னதுபோல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்று சொன்னாலும், எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எந்த வித சம்மந்தமும் இல்லை என்று சொன்னாலும் சரியல்ல. எனது கணவர் வாங்கிய கடனை திருப்பிக் கொடுக்காமல் எனது கணவர் எதிரி மீது பொய்யாக கொடுத்த புகாருக்கு ஆதரவாக நான் பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல.

M JAYAMANI
Digitally signed by M JAYAMANI
Date: 2025.03.03 18:15:35 +0530